## திருப்பூர் மாவட்டம் சிக்கனூத்து அருகில் ரோந்துப் பணியின் போது உயிரிழந்த

# குடிமங்கலம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் குடும்பத்தினருக்கு ஆறுதல் - ரூ.1 கோடி நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஆக.7-

திருப்பூர் மாவட்டம், சிக்கனூத்து அருகில் ரோந்துப் பணியின்போது உயிரிழந்த குடிமங்கலம் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் அவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் ரூபாய் ஒரு கோடி நிதியுதவி வழங்க தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

திருப்பூர் மாவட்டம், குடிமங்கலம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிப்புரிந்து வந்த சண்முகவேல் (வயது 57) மற்றும் ஆயுதப்படைக் காவலர் அழகுராஜா ஆகிய இருவரும் 05.08.2025 அன்று இரவு 11.00 மணியளவில் ரோந்துப் பணியின்போது சிக்கனூத்து அருகில் தனியரின் தோட்டத்து சாலையில் நடந்த அடிதடி பிரச்சினை குறித்து தகவல் அறித்ததும் விசாரிக்க சம்பவ இடத்திற்குச் சென்றபோது அடிதடி பிரச்சினையில் ஈடுபட்டிருந்த மூவர் சிறப்பு உதவி ஆய்வாளர் மற்றும் ஆயுதப்படை காவலர் ஆகிய இருவரையும் துரத்திச் சென்று அரிவாளால் வெட்டியதில் சிறப்பு உதவி ஆய்வாளர் சண்முக வேல் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும், வேதனையுமடைந்தேன்.

சிறப்பு உதவி ஆய்வாளர் சண்முகவேல் அவர்களின் உயிரிழப்பு தமிழ்நாடு காவல்துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். இந்தக் கொடூரச் செயலில் ஈடுபட்ட குற்றவாளிகளை விரைந்து கைதுசெய்ய காவல்துறையினருக்கு உத்தரவிட்டுள்ளேன்.

சண்முகவேல் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்கள் மற்றும் அவருடன் பணிபுரிபவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு ஒரு கோடி ரூபாய் நிவாரண நிதி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

## முத்தமிழறிஞர் கலைஞர் 7-ஆம் ஆண்டு நினைவு நாள்!

# பெரம்பலூர் மாவட்ட தி.மு.க.சார்பில் அமைதி பேரணி!

## மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிக்கை!



பெரம்பலூர், ஆக.7-

தமிழ்நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டு வாழ்ந்த தமிழகத்தின் சிற்பி முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் நம்மையெல்லாம் விட்டுச் சென்று ஆறு ஆண்டுகள் நிறைவடைந்து ஏழாவது ஆண்டு தினம் இன்று (07.08.2025, வியாழக்கிழமை) அனுசரிக்கப்படுகிறது.

கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா. எம்.பி., வழிகாட்டுதல்படி, போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆலோசனைக்கினங்க, பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் (எனது) தலைமையில், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் முன்னிலையில், இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு, கிருஷ்ணாபுரம் ஊராட்சியில் இருந்து அமைதி ஊர்வலமாக வந்து அங்குள்ள டாக்டர் கலைஞர் அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது. அதன் பிறகு 10.30 மணிக்கு, பெரம்பலூர்

பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது. இதில் மாநில நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய,நகர, பேரூர் கழகச்செயலாளர்கள்,

மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், முன்னாள், இன்னாள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், வார்டு, கிளைக் கழகச் செயலாளர்கள், கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தனது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

# தமிழ்நாட்டில் உர பிரச்சினைகளுக்கு ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

## நாடாளுமன்றத்தில் — தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி!



புதுடெல்லி, ஆக.7-

தென்சென்னை தொகுதி மக்களவை உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் மக்களவையில் ரசாயனம் மற்றும் உரங்கள் தொடர்பான சில கேள்விகளை முன் வைத்திருந்தார்.

அதாவது, 2024-2025ம் நிதியாண்டில் காரீப் மற்றும் ராபி பயிர்களுக்காக தமிழ்நாட்டுக்கு ஒதுக்கப்பட்ட யூரியா மற்றும் என்.பி.கே. உரங்களின் அளவின் விவரம், மாநில தேவையுடன் ஒப்பிடும்போது இதில் ஏதேனும் பற்றாக்குறை இருந்ததா?, புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு கூடுதல் மானியம் மற்றும் முன் கூட்டியே அனுப்ப வேண்டும் என்ற தமிழகத்தின் தொடர்ச்சியான கோரிக்கைகளுக்கு மத்திய அரசு பதில் அளித்துள்ளதா?, யூரியா மற்றும் டி.ஏ.பி. மீதான விலை ஒழுங்குமுறையின் தற்போதைய நிலை என்ன? கடந்த ஓராண்டில் தமிழ்நாட்டில் சிறு விவசாயிகள் மீதான இந்த மாற்றங்களின் தாக்கம் என்ன?, மாநிலத்தில் மானிய விலை உரங்களை திசை திருப்புதல் அல்லது கள்ளச்சந்தையை தடுக்க ஏதேனும் கண்காணிப்பு வழிமுறைகள் செயல்படுத்தப்பட்டுள்ளதா? ஆகிய கேள்விகளை கேட்டு இருந்தார்.

இதற்கு மத்திய ரசாயனம் மற்றும் உரங்கள் துறை இணை அமைச்சர் அனுபிரியா பட்டேல் எழுத்துப்பூர்வமாக பதில் அளித்தார்.

அந்த பதிலின் விவரங்கள் வருமாறு:

2024-2025ம் ஆண்டின் காரீப் மற்றும் ராபி பருவங்களில் தமிழ்நாடு மாநிலத்தில் யூரியா மற்றும் என்.பி.கே. உரங்களின் கிடைக்கும் தன்மை போதுமானதாக உள்ளது. இதன் முழு தகவல்கள் புள்ளிவிவரங்களாக கொடுக்கப்பட்டு உள்ளன. யூரியா மானியத் திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு தற்போது சட்டப்பூர்வமாக அறிவிக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலையில் யூரியா வழங்கப்படுகிறது. 45 கிலோ யூரியா மூட்டை ஒரு பைக்கு ரூ.242க்கு (வேம்பு பூச்சு மற்றும் பொருந்தக்கூடிய வரிகளுக்கான கட்டணங்கள் தவிர்த்து) கிடைக்கும்.

பண்ணையில் யூரியாவின் விநியோக விலைக்கும், யூரியா அலகுகளால் நிகர சந்தை உணர்தலுக்கும் உள்ள வேறுபாடு இந்திய அரசாங்கத்தால் யூரியா உற்பத்தியாளர் மற்றும் இறக்குமதியாளருக்கு மானியமாக வழங்கப்படுகிறது. மேலும், பாஸ்பேட் மற்றும் பொட்டாசியம் உரங்களுக்கு 142010 முதல் நடைமுறைக்கு வரும் ஊட்டச்சத்து அடிப்படையிலான மானியக் கொள்கையை அரசாங்கம் செயல்படுத்தியுள்ளது.

இவ்வாறு பதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

### தி.மு.க. மீனவர் அணி

### மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

**அணிச் செயலாளர் டாக்டர் ஏ.ஜோசப் ஸ்டாலின் அறிவிப்பு**

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர்/பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. மீனவர் அணி அணியின் **விழுப்புரம் மத்திய, திருப்பூர் மத்திய, ஈரோடு மத்திய** ஆகிய மாவட்டங்களின் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**விழுப்புரம் மத்திய மாவட்டம்**

தலைவர் - எம். ராஜா 3, அங்காளம்மன் கோயில் தெரு, விழுப்புரம்.

துணைத் தலைவர் - வி. ராஜேந்திரன் முத்துமாரியம்மன் கோயில் தெரு, மீனவர் வீதி, பொம்மையார்பாளையம், விழுப்புரம் மாவட்டம்.

அமைப்பாளர் - வி. மணி தந்திராயன் குப்பம், கோட்டக்குப்பம் நகராட்சி, வானூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ஜெ. செந்தமிழ்செல்வன் 54, முருகன் கோயில் தெரு, பிள்ளைச்சாவடி, வானூர் வட்டம், விழுப்புரம். 2) எம். கொளஞ்சியப்பன் 56, இ.பி. தெரு, சாலமேடு, விழுப்புரம். 3) எம்.கே. கார்த்தி குப்புசாமி முதலியார் தெரு, வி. மருதூர், விழுப்புரம். 4) எ.கே. வீரப்பன் 12, செங்கணியம்மன் கோயில் தெரு, சின்னமுதலியார் சாவடி, கோட்டக்குப்பம் நகராட்சி, வானூர் வட்டம், விழுப்புரம். 5) தெ. சுந்தரபாண்டியன் 2, செந்தில் நகர், சித்தேரிக்கரை, விழுப்புரம் - 605605.

**திருப்பூர் மத்திய மாவட்டம்**

தலைவர் - நா. கருணாகரன் 11, பல்லடம் ரோடு, காட்டுவளவு மெயின் வீதி, தென்னம்பாளையம், திருப்பூர் - 641604.

துணைத் தலைவர் - அ. ரஹமத்துல்லா 75கே/69ஏ, செம்மேடு தோட்டம், பள்ளிவாசல் வீதி, திருப்பூர் - 641604.

அமைப்பாளர் - மு. நந்தகோபால் 23, சித்ரகார் நகர், திருப்பூர் - 641604.

துணை அமைப்பாளர்கள் - 1) அ. விஸ்வநாதன் 9/1, கோபால் நகர் 2வது வீதி, கருவம்பாளையம், திருப்பூர் - 641604. 2) ஆ. சுதாகர் 258, ஜெய் நகர் 3வது வீதி, திருப்பூர் - 641606. 3) சு. வடிவேல் 1-4, புளியமரத்தோட்டம், கள்ளம்பாளையம், பல்லடம், திருப்பூர்.

4) மு. அபுதாஹீர் 31/351, எம்.என்.ஆர். லைன், பெரியகடை விதி, திருப்பூர் - 641604. 5) சு. சம்பத்குமார் 31, கரட்டாங்காடு 3வது வீதி, தாராபுரம் ரோடு, திருப்பூர் - 641604.

**ஈரோடு மத்திய மாவட்டம்**

தலைவர் - கே. சிங்காரவேலு 34, திருவள்ளுவர் நகர், பவானி - 638301, ஈரோடு மாவட்டம்.

துணைத் தலைவர் - தி. செல்வராஜ் 5/273, பாச்சாங்காட்டுபாளையம், செங்கப்பள்ளி, ஊத்துக்குளி, ஈரோடு.

அமைப்பாளர் - கே.இ. தண்டபாணி மேட்டூர் மெயின் ரோடு, குருப்பநாயக்கன்பாளையம், பவானி, ஈரோடு.

துணை அமைப்பாளர்கள் - 1) எஸ். பிரகாஷ் 60/86, தந்தை பெரியார் வீதி, பவானி, ஈரோடு. 2) எஸ்.கே. பழனிச்சாமி 4/127, சாமியார் பாளையம் தெரு, பல்லகவுண்டன்பாளையம், ஈரோடு. 3) ர. நடராஜ் அக்கறையாம்பாளையம், வாய்ப்பாடி, சென்னிமலை, ஈரோடு. 4) பி. வீரப்பன் நாகிரெட்டிபாளையம், முகாசிப்புதூர், பவானி - 638314, ஈரோடு.

5) எம். முத்துகுமார் 1/358, சேரன் நகர், மேட்டுப்புதூர், விஜயமங்கலம், ஈரோடு.

**"அண்ணா அறிவாலயம்"**<br>**சென்னை – 18.**<br>**நாள் 05–08–2025.**

**டாக்டர் ஏ.ஜோசப் ஸ்டாலின்**<br>**செயலாளர்**<br>**தி.மு.க. மீனவர் அணி.**

### தி.மு.க. மீனவர் அணி

### கரூர் மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

**தி.மு.க. மீனவர் அணிச் செயலாளர் டாக்டர் ஏ.ஜோசப் ஸ்டாலின் அறிவிப்பு!**

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. மீனவர் அணி அணியின் கரூர் மாவட்டம் - கரூர் மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**கரூர் மாவட்டம்**

**கரூர் மாநகரம்**


அமைப்பாளர் - எஸ். சந்திரகுமார், 41ஏ, கோல்டன் சிட்டி, ஆர். டி.ஓ. ஆபீஸ் பின்புறம், கலெக்டர் ஆபீஸ் அஞ்சல், கரூர் தாலுக்கா, கரூர் மாவட்டம் - 639007

துணை அமைப்பாளர்கள் - 1) ஆர். ராஜேந்திரன், 11 - கே. எஸ். பி. தெரு, வெங்கமேடு அஞ்சல் கரூர் தாலுக்கா, கரூர் - 639006 2) பி. கணேசன், 59ஏ, வெங்க்கல்பட்டி, கலெக்டர் அபீஸ் அஞ்சல், கரூர் தாலுக்கா, கரூர் மாவட்டம் - 639007 3) எம். மகாமுனி, முதல் கிழக்கு தெரு, திருமாநிலையூர், திருமாநிலையூர் அஞ்சல், கரூர் மாவட்டம்-639005 4) அ.அறிவழகன் (எ) சூளக் குமார், 177, முதல் கிழக்கு தெரு, திருமாநிலையூர், திருமாநிலையூர் அஞ்சல் கரூர் தாலுக்கா, கரூர் மாவட்டம் - 639003 5) எஸ். மோகன், 42பி, இந்திரா நகர், தெற்கு காந்தி கிராமம், பசுபதிபாளையம் அஞ்சல், கரூர் மாவட்டம் - 639004 6) வி. வேல்முருகன், 39,பூங்கா நகர், தாந்தோணி மலை, தாந்தோணி மலை அஞ்சல், கரூர் தாலுக்கா, கரூர் மாவட்டம் : 639005

**"அண்ணா அறிவாலயம்"**<br>**சென்னை – 18.**<br>**நாள் 05–08–2025.**

**டாக்டர் ஏ.ஜோசப் ஸ்டாலின்**<br>**செயலாளர்**<br>**தி.மு.க. மீனவர் அணி.**

# தலைவா! உன் புகழ் வாழ்க!



தந்தை பெரியாரும்
சிந்தைநிறை அண்ணாவும்
விந்தையென ஒருருவாய்
வந்தஎங்கள் மன்னவனே!

"வீழ்வதுநாம் என்றாலும்
வாழ்வதுநம் தமிழ்"என்றே
ஆழ்மனத்தி லே,பதிய
அனைவருக்கும் சொன்னவனே!

அகரச்செந் தமிழுக்கோர்
அரணாக வாய்த்தவனே!
சிகரத்தின் உயரத்தில்
செம்மொழியை வைத்தவனே!

இன்னலுற்று வெஞ்சிறையில்
வெந்தவனே! எந்தமிழர்
முன்னேறப் படிக்கட்டாய்
முதுகெலும்பைத் தந்தவனே!

அடல்மறவர், யாருக்கும்
அஞ்சாத தமிழர்என
உடன்பிறப்புப் பெரும்படையை
உருவாக்கி வென்றவனே!

தென்புலத்தை மீட்கவந்த
தீரர்களை, வீரர்களை
அன்பு முகம்காட்டி
அரவணைத்துச் சென்றவனே!

மறையுமோ அழகுமுகம்?
மறக்குமோ ஆசைமுகம்?
உறங்கினால் கனவிலும்
உனதுமுகம்! எம்தலைவா!

நினைவுநாள் உனக்கில்லை!
நேற்று,இன்று, நாளைஉன்னை
நினையாத நாள்ஒன்று
நிச்சயமாய் எமக்கில்லை!

வாராது போல்வந்த
மாமணிநின் திருவடியை
ஈரக் கடலலைகள்
எப்போதும் வணங்கிஎழும்!

கோள்களும்உன் பெயர்போற்றிக்
கொண்டாடும்! நாட்காட்டித்
தாள்களும்உன் பொதுவாழ்வுச்
சாதனையைக் கவிபாடும்!

மூப்பிலும்நீ தமிழ்நாட்டை
முழுவதுமாய் சுற்றிவந்து
காப்பாற்றி வைத்ததனால்
கைகூப்பும் எண்டிசையும்!

மேற்குமலைத் தொடர்ச்சியிலே
மிதந்துவரும் காற்றும்,உன்
நாற்காலிச் சக்கரத்தை
நாடிவந்து முத்தமிடும்!

மழைமுகில்உன் எழுதுகோல்
மையில்,மையல் கொண்டதனால்
பொழியும்இளந் தூறல்எனும்
பூத்தூவி உனைவணங்கும்!

வெண்ணிலவின் தலைமையிலே
விண்மீன்கள் கூட்டம்இந்த
மண்மீதுன் நினைவிடத்தில்
மலர்வளையம் வைக்கவரும்!

ஓங்கும்எழிற் பூவனங்கள்
ஒன்றாகி அணிவகுத்துத்
தூங்கும்உன்றன் கல்லறையில்
தோரணமாய் காட்சிதரும்!

முன்விழித்து நீஎழுந்த
பின்,விழிக்கும் சூரியன்உன்
பொன்னடிக்குக் கண்விழித்துத்
தன்வணக்கம் சொல்லவரும்!

நோற்றவத்தால் பிறந்தவனே!
நூலகநூல் அத்தனையும்
ஆற்றாமல் படபடக்கும்!
அறிவுமகன் உன்பிரிவால்!

தோற்றமுண்டு! முடிவில்லை!
துலங்கும்உன்பேர் காலம்வென்று
வீற்றிருக்கும் பெரும்பேறு!
விழாவெடுக்கும் வரலாறு!

கலைவணங்கும்! சிலைவணங்கும்!
"கருவில்வந்த திரு"நின்னை
மலைவணங்கும்! வான்வணங்கும்!
வையகமே உனைவணங்கும்!

உலகமொழி அத்தனையும்
ஒருகுடைக்கீழ் வந்துநின்றே
தலைவணங்கும்! உனதுபுகழ்
தமிழ்போல வாழ்க!என்றே!



**... கவிச்சுடர் கவிதைப்பித்தன்.**

## ஒன்றிய அரசின் நிதி உதவித் திட்டங்களில்

# தமிழ்நாட்டில் பயனடைந்த தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை என்ன?

## மக்களவையில் — காஞ்சிபுரம் க.செல்வம் கேள்வி!



சென்னை, ஆக.7-

கடந்த ஐந்து ஆண்டுகளிலும், நடப்பு ஆண்டிலும், தமிழ்நாடு உட்பட பிற மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசங்கள் வாரியாக தொழிலாளர்களின் நலன், சமூகப் பாதுகாப்பு மற்றும் திறன் மேம்பாட்டை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட பல்வேறு ஒன்றிய நிதியுதவித் திட்டங்களின் (CSS) கீழ் ஒன்றிய அரசு வழங்கிய உதவியின் விவரங்கள் என்ன?

மேற்கூறிய காலகட்டத்தில் தமிழ்நாட்டில் இந்தத் திட்டங்களால் பயனடைந்த மொத்த தொழிலாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

ஒன்றிய நிதியை விடு விப்பதில் தாமதம் அல்லது பற்றாக்குறை காரணமாக மாநில அரசுகள், குறிப்பாக தமிழ்நாடு எதிர்கொள்ளும் சிரமங்களை அரசாங்கம் அறிந்திருக்கிறதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

தொழிலாளர்களிடையே சிறந்த தொடர்புக்காக, மேம்பட்ட திட்ட செயல்படுத்தலில் ஒன்றிய அரசின் பங்கு என்ன?

அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட / எடுக்க முன்மொழியப்பட்ட குறிப்பிட்ட நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன? என்று காஞ்சிபுரம் தொகுதி உறுப்பினர் க.செல்வம் கேள்வி எழுப்பினார்.

இக்கேள்விக்கு ஒன்றிய அரசின் "தொழிலாளர்களுக்கான மத்திய அரசு நிதியுதவி திட்டங்கள்" தொடர்பான பதிலில் குறிப்பிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் ஆகஸ்ட் 26,2001 அன்று இஷ்ரம் போர்ட்டலை (eshram.gov.in) தொடங்கியுள்ளது. இது ஒரு அமைப்புசாரா தொழிலாளி சுய அறிவிப்பு அடிப்படையில் இந்த போர்ட்டலில் தன்னைப் பதிவு செய்ய அனுமதிக்கிறது. ஆதாருடன் இணைக்கப்பட்ட அமைப்புசாரா தொழிலாளர்களின் தேசிய தரவுத்தளத்தை உருவாக்குவதும், அத்தகைய தொழிலாளர்களுக்கு தற்போதுள்ள சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத்திட்டங்களின் கீழ் விநியோகத்தை எளிதாக்குவதும் இஷ்ரம் போர்ட்டலின் முக்கிய நோக்கமாகும். 31072025 நிலவரப்படி, தமிழ்நாடு மாநிலத்தில் 93.10 லட்சம் பேர் உட்பட 30.97 கோடிக்கும் மேற்பட்ட அமைப்புசாரா தொழிலாளர்கள் இஷ்ரம் போர்ட்டலில் பதிவு செய்துள்ளனர்.